**தலைப்பு 202 – முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 202 - முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 10 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 138.60 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 127.47 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 11.13 மில்லியன் அதாவது 8.04 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 106.72 | 97.12 | 9.60 | 9.00 |
| மூலதனம் | 31.88 | 30.85 | 1.53 | 4.80 |
| மொத்தம் | 138.60 | 127.47 | 11.13 | 8.04 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 20201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 4.00 | 2.49 | 1.25 | 1.63 | 12.00 | 6.47 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 6000/0000/00/0016/0094/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 17.42 மில்லியனாக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்பட்ட பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணனி, கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 452(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

9 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 12 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

20201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடன்மீதிகளில் கூட்டுத்தொகை ரூபா 313,769 ஆக இருந்ததுடன் அந்நிலுவை கடன் மீதிகள் 01 வருடம் முதல் 25 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 1994 ஆகஸ்ட் மாதம் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் தனியார் மீதிகளுக்காக அட்டவணை தயாரிக்கும் போது உரிய பிரகாரம் நாட்கள் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் தனியாள் மீதிகளுக்காக அட்டவணைகள் தயாரிக்கும் போது உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லல், சேவை வரிதாக்கிச் செல்லல், வேலை இடை நிறுத்தம் செய்தல், வெளிநாடு செல்லல் போன்றவற்றிற்காக உரிய திகதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.4.1 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்திற்காக உள்ளகக் கணக்காய்வு பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அது வெற்றிடமாக காணப்பட்டதுடன் திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2009 யூன் 06 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டிற்கு ஒரு தடவை வீதம் வருடாந்தம் குறைந்தது 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396 | 704,229 | வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களைக் கடந்த 68 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | நிதிப்பிரமாணம் 447(4), 447(9) | - | செலவினப் பேரேட்டில் பதிவுசெய்யும் போது உரிய இடங்களில் கூட்டுப்பெறுமதி உள்ளடக்கப்படுவதால் அதன் மூலம் நிதிக்கட்டுப்பாடொன்றை மேற்கொள்ளக்கூடிய வகையில் பேணப்பட்டிருக்கவில்லை. |

**3.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**ரமழான் நோன்பினை முன்னிட்டு சவூதி அரேபியா அரசினால் இலவசமாக வழங்கப்பட்ட பேரீச்சம் பழங்களை விடுவித்தலும் பகிர்ந்தளித்தலும்.**

ரமழான் நோன்பினை முன்னிட்டு முஸ்லிம் சமூகத்திற்கு பகிர்ந்தளிப்பதற்காக சவூதி அரேபிய குடியரசினால் இலங்கைக்கு 222 மெற்றிக் தொன் பேரீச்சம் பழம் இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. இந்த பேரிச்சம் பழ இருப்பு சுங்கத்திலிருந்து விடுவிக்கும் போது இலங்கை துறைமுக அதிகாரசபை கட்டணங்கள், கப்பல் கம்பனி கட்டணங்கள், சுங்கக் கட்டணங்கள், கொள்கலன் கட்டணங்கள், விடுவிக்கும் கம்பனியின் கட்டணங்கள் மற்றும் ஏனைய வரிகளாக ரூபா 20,477,913 தொகை தனியார் கம்பனிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இக் கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.3 வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை நிறுவனத்தினால் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் பேரீச்சம் பழங்களை விடுவித்தல் தொடர்பான கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உரிய தனியார் கம்பனியால் பேரீச்சம் பழங்களை விடுவிப்பதற்காக ரூபா 16,229,833 ஆன அண்ணளவான மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அது பின்னர் ரூபா 19,089,707 எனவும் ரூபா 20,477,913 எனவும் அவ்வவப் போது திருத்தப்பட்டிருந்தன அதன் பிரகாரம் ஆரம்ப மதிப்பீட்டின் படி ரூபா 4,248,080 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,000,000 ஐயும் மேலதிக நிதிஏற்பாட்டின் மூலம் பெற்றுக்கொண்ட ரூபா 13,230,000 தொகையையும் முஸ்லீம் தர்ம நிதியத்திலிருந்து ரூபா 1,500,000 தொகையையும் பயன்படுத்தி பட்டியல் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், மேலும் பணம் செலுத்த வேண்டியிருந்ததால் விடுவிப்பு நடவடிக்கைகள் தாமதமாகியிருந்தன. அதன் காரணமாக செலுத்த வேண்டிய மொத்தப் பணம் ரூபா 20,477,913 என குறிப்பிட்டு அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் அது சிக்கனமற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்திற்கு 222 மெற்றிக் தொன் பேரீச்சம் பழம் கிடைத்திருந்ததுடன், அதில் 20 மெற்றிக் தொன் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த பேரீச்சம் பழ இருப்பு குறித்த தரப்பினருக்கு கையளித்தமை மற்றும் அந் நிறுவனத்தினால் இந்த பேரீச்சம் பழத்தை பகிர்ந்தளித்தமை தொடர்பான தகவல்கள் திணைக்களத்திடம் காணப்படவில்லை.

(உ) திணைக்களத்தினால் நேரடியாக பகிர்ந்தளிக்கப்பட்ட 202 மெற்றிக் தொன்னில் 124,744 கிலோகிராம் பேரீச்சம் பழம் கிடைக்கப் பெற்றதாக குறித்த பள்ளிவாசல்களிலிருந்து உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.7.1 அரசின் பெறுகை வழிகாட்டல் செயற்பாட்டிலிருந்து விலகல்

#### (அ) அறநெறி பாடசாலைக்கான சீருடைத்துணி கொடுப்பனவு

மீளாய்வாண்டிற்காக அறநெறி பாடசாலைக்காக சீருடை துணி கொள்வனவிற்காக இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு ரூபா 6,899,543 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த கூறு விலை கோரல் மற்றும் வழங்குனர் தெரிவு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையில் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம் திணைக்கள பெறுகை குழுவின் மூலம் ரூபா 10 மில்லியன் வரை அங்கீகரிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட முடியுமான போதிலும், அதற்கான முத்திரையிடப்பட்ட 5 இற்கு குறையாத விலை கோரப்பட வேண்டும். இங்கு 8 பேருக்கு கடிதம் அனுப்பியதாகக் முகவரிகள் உள்ளடக்கப்பட்ட குறிப்பொன்று கோவைக்கு இணக்கப்பட்டிருந்த போதிலும் கடிதம் அனுப்பியதை உறுதிப்படுத்துவதற்கு பதிவுத்தபால் பற்றுச்சீட்டு அல்லது கடிதம் கையளிக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. கூறுவிலை திறக்கும் சந்தர்ப்பத்தில் உரிய நிறுவனத்தின் பிரதிநிதிகள் சமூகமளித்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

ii. நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு இலங்கை புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைகள் நிறுவகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவரால் வழங்கப்பட்ட அவதானிப்பு அறிக்கையின் பிரகாரம் இரண்டு வழங்குனர்களும் வழங்கியிருந்த அபாயா துணி மற்றும் காற்சட்டைத்துணி விதந்துரைக்கு பொருத்தாமையால் அங்கீகரிக்க முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் வேண்டுகோளின் பிரகாரம் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலும் அபாயா துணி மற்றும் காற்சட்டை துணிகளின் மாதிரி விதந்துரைகளுடன் இணங்கவில்லையென

குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வழங்குனரிடமிருந்து சீருடைக்கான துணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

iii. அபாயா துணிக்காக கூறு விலை போரும் போது 3.5 மீற்றர் வீதம் 2500 துணி துண்டுகள் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கொள்வனவிற்காக 3.5 மீற்றர் வீதம் 5080 துணி துண்டுகள் கட்டளையிடப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் கூறு விலை கோரும் போது குறிப்பிடப்பட்ட அளவை மிகைத்து 2580 துணி துண்டுகள் கூடுதலாக கொள்வனவு செய்யப்பட்டமைக்காக ரூபா 2,829,767 கூடுதலாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

iv. காற்சட்டை மற்றும் சேர்ட் துணி துண்டுகள் சமமான அளவில் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 1488 மற்றும் 1333 என வேறுபட்ட அளவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அங்கு சேர்ட் துணியை விட 140 காற்சட்டை துணி துண்டுகள் கூடுதலான விலைக்கு கொள்வனவு செய்தமைக்கான காரணம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

v. சீருடை துணிக்காக பெறுவனவு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. கொடுப்பனவு உறுதிச்சீட்டினை பின்பக்கத்தில் முத்திரையின் பேரில் களஞ்சிய பேரேட்டில் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்திகதி களஞ்சிய பேரேட்டில் குறிப்பிடப்பட்ட திகதிகளுடன் இனங்காமை அவதானிக்கப்பட்டது.

vi. 2017 யூலை 12 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது 44 அபாயா துணியை மற்றும் 5 சேர்ட் துணிகளும் மிகையாகவும் 9 காற்சட்டை துணிகள் பற்றாக்குறையாகவும் காணப்பட்டன.

(ஆ) அஹதியா அறநெறி பாடசாலை புத்தக அச்சீடு

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் அஹதியா அறநெறி பாடசாலைகளுக்கு வழங்கும் 10, 11, மற்றும் 12 ஆம் ஆண்டுகளின் பாடப்புத்தகங்களை சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் மொழிபெயர்ப்பதற்கும் 6 முதல் 9 வரையான தரங்களிற்கு பாடப்புத்தகங்கள் தமிழ் மொழி மூலம் சரவை பார்க்கப்பட்டு அச்சிட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சிங்களம் மற்றும் ஆங்கில மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்ட அஹதியா அறநெறி பாடசாலைகளின் 10.11 மற்றும் 12 ஆம் தரங்களிற்கான பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கான அரச அச்சக திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடு ரூபா 4,264,200 ஆக இருந்ததுடன் அம் முழுத்தொகையையும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது நிதி ஏற்பாடு மாற்றுவதன் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அச்சிடப்பட்ட புத்தகங்கள் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் கிடைக்காத காரணத்தினால் பணம் செலவிடப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் போது 6 ஆந் தரத்திலிருந்து 9 ஆந் தரம் வரையான அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்காக 8 பாடப்புத்தகங்கள் சரவை பார்க்கப்பட்டு அச்சிட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அரச அச்சிட்டு திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மொத்த மதிப்பிடான ரூபா 3,493,700 மற்றும் மதிப்பாசிரியர் குழுவிற்கு ரூபா 2,080,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 யூலை 31 ஆந் திகதி வரை புத்தகங்கள் அச்சிடப்பட்டு திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.8 முகாமைத்துவ நலிவுகள்**

முஸ்லிம் பள்ளிவாசல்களின் அபிவிருத்திக்காக ரூபா 15,800,000 ஆன மதிப்பீட்டுத் தொகை பள்ளிவாசல்களிலிருந்து கிடைத்த வேண்டுகோளின் பேரில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், உதவிகள் தேவைப்படும் பள்ளிவாசல்கள் இனங்காணப்பட்டு அப்பள்ளிகளுக்கு உதவிப் பணம் வழங்குவதற்காக வேலைத்திட்டமொன்று திணைக்களத்திடம் காணப்படவில்லை.

**3.9 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 04 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | - | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 95 | 56 | 39 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 17 | - | - |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக ஒப்பந்தம்) | - | 27 | - | 27 |
| | மொத்தம் | 123 | 104 | 46 | 27 |